செப்டம்பர் 20 காரைக்குடி

ஸ்ரீ ராஜா ராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்க்கும் நிகழ்ச்சி வெகு சிறப்பாக நடைபெற்றது ,இந்நிகழ்ச்சியில் அழகப்பா பல்கலை கழகத்தின் மேனாள் துணைவேந்தரும் ஸ்ரீ ராஜா ராஜன் கல்வி குழுமத்தின் ஆலோசகரும் ஆன முனைவர் S.சுப்பையா தலைமையுரையாற்றினார் ,அவருடைய உரையில் மாவணர்கள் எதிர்காலத்தில் பாட அறிவை வளர்த்து கொள்வது மட்டுமில்லாமல் அவர்களுடைய தனி திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் அதற்கான அனைத்து விதமான பயிற்சிகளும் இங்கு அளிக்கப்படுகிறது என்று கூறினார்

மற்றும் சிறப்பு விருந்தினராக கவிஞர் திரு .தங்கம் மூர்த்தி சிறப்புரையாற்றினார் ,அவருடைய சிறப்புரையில் மாணவர்கள் ஒரு பாடத்தை படிக்கும் போது அவற்றை செயல்முறையில் எவ்வாறு உள்ளது என்று புரிந்து படிக்குமாறு அறிவுரை கூறினார் ,மற்றும் இந்த கல்லூரியில் அனைத்து விதமான துறைகளுக்கும் ஆய்வக வசதி உள்ளது என்றும் இங்கு படிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் வளாகத் தேர்வின் மூலம் வேலைவாய்ப்பு முகாம் இந்த கல்லூரியில் நடத்தப்படுகிறது என்று கூறினார் .மற்றும் பேராசிரியர் அய்யாவு பேசுகையில் மாணவர்களுக்கு கல்வி மட்டும்

கற்று கொடுக்காமல் நல்ல ஒழுக்கம் மற்றும் விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்க அனைத்து விதமான பயிற்சிகளும் இந்த கல்லூரியில் அளிக்கப்படுகிறது என்று கூறினார் .

மேலும் வரவேற்புரை வழங்கிய கல்லூரியின் ஒருங்கினைப்பாளர் பேராசிரியர் திருமதி .வடிவாம்பாள் பேசுகையில் இங்கு பலதரப்பட்ட முன்னனி நிறுவனங்கள் மூலமாக மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்று தருவது எங்களது முதல் குறிக்கோளாக கொண்டுள்ளோம் என்று கூறினார் .இந்த நிகழ்ச்சியில் சிறந்த மாணவர்களுக்கு பொன்னாடை போற்றி நினைவு பரிசு வழங்கப்பட்டது ,இறுதியில் பேராசிரியர் முனைவர் .மீனா தேவி அவர்கள் நன்றி உரை கூறினார் .இந்த விழாவிற்கான ஏற்பாட்டை பேராசிரியர் பழநிவேல் மற்றும் கல்லூரியின் துணை முதல்வர் பேராசிரியர் மாகலிங்க சுரேஷ் செய்தனர் .